Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JANUARY 9, 2024

செவ்வாய்க்கிழமை ஜனவரி 09, 2024 | ஒளி: 10 கதிர்: 167 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## முருங்கை 3,000 ரூபாய்

சந்தையில் மரக்கறிகளின் விலை உயர்வினால் யாழ்ப்பாண வார சந்தையில் ஒரு கிலோ கிராம் முருங்கைக்காயின் சில்லறை விலை 3,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்த நாட்களில் முருங்கை அறுவடை கிடைக்காததாலும், ஏனைய வகை மரக்கறிகளின் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாலும்,

தொடர்ச்சி P2

### நிகழ்காலத்தை விட

# "எதிர்காலம் முக்கியம்"

## ஜனாதிபதி வலியுறுத்து; 2025இல் தீர்வாம்

**இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசியல் தீர்வுகள் வழங்கப்படும்**

நிகழ்காலத்தை விட எதிர்காலம் தொடர்பில் கவனம் செலுத்தி அனைவரும் ஒரே இலங்கை நாட்டவர்களாக முன்னேற வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(07) நடைபெற்றது. அனைத்து குடிமக்களையும் உள்ளடக்கி சமூக, கலாசார, சமய மற்றும் கல்வி ரீதியாக நாட்டில் வலுவான அடித்தளத்தை உருவாக்க முன்னோடியாகப் பணியாற்றியவர் மறைந்த டி.பி. ஜயதிலக்க முன்னெடுத்தது போன்ற வேலைத்திட்டமொன்று நாட்டுக்கு அவசியமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## இன்று சபை கூடும்

புத்தாண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு, இன்று செவ்வாய்க்கிழமை (09) காலை 9.30 மணிக்கு கூடவுள்ளது.

## 300 கி.கி. லீக்ஸ் திருடிய இருவருக்கும் விளக்கமறியல்



■ செ.தி.பெருமாள்

விவசாய தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த லீக்ஸில், சுமார் 300 கிலோ கிராம் லீக்ஸை திருடிச்சென்று விற்பனைச் செய்தனர் என்றக் குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமிமலை ஹோல்டன் தோட்டத்தில் சனிக்கிழமை (06) இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## மின்சார விவகாரத்துக்கு எதிராக சஜித் வழக்கு



இலங்கை மின்சார சபை 52 பில்லியன் ரூபாய்க்கு மேல் பாரிய இலாபத்தை கடந்த சில மாதங்களில் ஈட்டியிருக்கும் வேளையில், இந்த இலாபம் நாட்டின் மின்சார நுகர்வோருக்கு நிவாரணமாக வழங்கப்படாமை,மின் கட்டணம் அதிகப்படியாக அதிகரிக்கப்பட்டதால் மின்கட்டணத்தைச் செலுத்த முடியாத 8 இலட்சம் மின் நுகர்வோரின் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளமை மற்றும் இதன் மூலம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் கூறி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கால் செய்தார்.

தொடர்ச்சி P2

## 4 பொலிஸார் மீது குடும்பமே தாக்குதல்

**பொலிஸ் உத்தியோகத்தரை வாயால் கடித்து அவரது சீருடையை கிழித்துள்ளார்**

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் மீது இளைஞன் ஒருவர் தாக்குதல் நடத்தியதில் காயமடைந்த 4 பொலிஸார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து, ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் அவரது தாய், சகோதரி உள்ளிட்ட மூவரும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2




## "லசந்தவுக்கு நீதி கிட்ட வேண்டும்"

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலைச் செய்யப்பட்டு, ஜனவரி 8 ஆம் திகதியுடன் 15 வருடங்கள் நிறைவடைந்தன. இதனைமுன்னிட்டு, அவரது உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் பொரளை மயானத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் திங்கட்கிழமை (08) அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ச்சி P2



## நீதியமைச்சரை சந்தித்தார் ஜூலி

**பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தேவையான திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டும்**



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சாங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று நீதியமைச்சில் திங்கட்கிழமை (08) இடம்பெற்றது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கச் சட்டமூலங்கள் தொடர்பாக நீதி அமைச்சர் மற்றும் அமெரிக்கத் தூதுவர் கருத்துப் பரிமாற்றம் செய்தனர்.

தொடர்ச்சி P2



## ஜெனிற்றாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

**வழக்கு விசாரணை திங்கட்கிழமை (08) எடுத்துக் கொள்ளப்பட்டது.**

■ க.அகரன்

வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றாவின் விளக்கமறியல் வெள்ளிக்கிழமை (12) வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனவரி 05ஆம் திகதி வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டு நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற வன்னி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## 3 எம்.பிக்கள் உட்பட ஏழு பேர் விடுவிப்பு

■ நிதர்ஷன் வினோத்

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி பயணித்த பேரணியில் கலந்து கொண்ட குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் உட்பட எழு பேரை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (08) விடுவித்தது.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

தொடர்ச்சி P2



### பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்:

# "கொந்தராத்துக்காக கொண்டுவரப்படின் ஆதரிக்கமாட்டோம்"

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட்



திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது என்று மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட்

தொடர்ச்சி P2

# “எதிர்காலம் முக்கியம்”

கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் 1898ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அனகாரிக தர்மபாலவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பகால தலைவராக டி.பி. ஜயதிலக தெரிவு செய்யப்பட்டதோடு நாட்டின் மிகப் பழமையான மற்றும் மிகப் பெரிய பௌத்த அமைப்பாகக் கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் நாட்டிற்கான பரந்த நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றது.

‘ஒரே இலங்கைக்கான கருத்தாடல்’என்ற தொனிப்பொருளில் இவ்வருட ஆண்டு நிறைவு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த சங்கத்தின் நோக்கு மேற்கத்திய நாடுகளின் நோக்கை விட வேறுபட்டது. பௌத்த கல்வியில் நாட்டை முன்னேற்றுவதற்கு இச்சங்கம் பெரும் உதவியாக இருந்தது. டி.பி. ஜயதிலக இதற்குத் தலைமை வழங்கினார். அவரின் பாரியார் களனி ரஜமஹா விகாரைக்கும் பெரும் சேவை செய்தார்.

யுத்தத்துடன் தொடர்புடைய அனைத்து பிரச்சினைகளுக்கும் 2025ஆம் ஆண்டாகும் போது தீர்வு வழங்க எதிர்பார்க்கிறோம். இடம்பெயர்ந்தோர் மற்றும் காணாமல் போனவர்களின் பிரச்சினைகள் தொடர்பான அரசியல் தீர்வுகள் வழங்கப்படும்.

அத்துடன், நாகதீப விகாரையை மையமாகக் கொண்ட சமய நிலையத்தை மேலும் விரிவுபடுத்தவும், யாழ்ப்பாணத்தில் தனித்துவமான இந்து ஆலயத்தை நிறுவவும் எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டு முன்னேறுவோம். இது குறித்து இளைஞர்களுடன் கலந்துரையாட வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப அவர்களின் ஆலோசனைகள், திட்டங்கள், ஆலோசனைகள் தேவை.

நாம் நிகழ்காலத்தையன்றி எதிர்காலத்தைப் பற்றி நோக்க வேண்டும். டி.பி.ஜயதிலக்க உருவாக்கியது போன்ற திட்டம் மீண்டும் அவசியம். மேலும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடாக முன்னேற்றக்கூடிய ஒரு திட்டம் தேவை என்றார்.

# முருங்கை 3,000 ரூபாய்

முருங்கையின் விலையும் அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மரக்கறி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த விலைகளின்படி, யாழ்ப்பாணத்தில் முருங்கைக்காய் ஒன்றின் விலை 1,000 ரூபாவாகும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ கிராம் முருங்கைக்காயின் மொத்த விலை 2,500 ரூபாவாக காணப்பட்டதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து பல மாகாணங்களுக்குச் செல்லும் பேருந்துகளிலும் முருங்கைக்காய் கட்டுக்கட்டாக ஏற்றப்பட்டிருந்தமையை காணமுடிகின்றது.

# ஜெனிற்றாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

இதன்போது வடக்கு, கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அச்சங்கத்தின் தலைவி உட்பட இருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அன்றையதினம் மாலை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது சங்கத்தின் தலைவி சி.ஜெனிற்றா, திங்கட்கிழமை (08) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், மற்றைய பெண் பிணையில் விடுவிக்கப்பட்டார்

குறித்த வழக்கானது திங்கட்கிழமை (08) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே, ஜெனிற்றாவின் விளக்கமறியல் 12ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

# 4 பொலிஸார் மீது குடும்பமே தாக்குதல்

அவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் சனிக்கிழமை (06) ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 17ம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார்.

கொக்குவில் 2ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் சம்பவ தினமான வெள்ளிக்கிழமை 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு மதுபோதையில் இருந்துள்ளார். அந்த பகுதி வீதியில் நிறுத்திவைத்திருந்த முச்சக்கரவண்டி ஒன்றின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். இதனால் முச்சக்கரவண்டி சேதமடைந்துள்ளது. இந்நிலையில், அதன் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து மதுபோதையில் இருந்த இளைஞனை அவரது தாயார் மற்றும் சகோதரி தமது தோல்களில் சுமந்தவாறு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றபோது அங்கிருந்த பொலிஸ் சாஜன்ட் ஒருவர் கதிரையில் இருக்குமாறு தெரிவித்துள்ளார். அப்போது குறித்த இளைஞன் அந்த கதிரையைத் தூக்கி பொலிஸ் மீது தாக்குதல் மேற்கொண்டதில் அவர் படுகாயமடைந்தார்.

இந்நிலையில், பொலிஸ் நிலையத்தில் இருந்த ஏனைய பொலிஸார் குறித்த இளைஞனை மடக்கி பிடித்து கைவிலங்கிட்டு பொலிஸ் நிலைய கைதி கூட்டின் வெளிபகுதில் வைத்திருந்த நிலையில் அந்த இளைஞன் தனது தலையைக் கூண்டின் கதவில் அடித்துக்கொண்டார்.

மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் அதனைத் தடுக்க முற்பட்டபோது அவரை வாயால் கடித்து அவரது சீருடையைக் கிழித்துள்ளார். அந்த பொலிஸ் உத்தியோகத்தரை காப்பாற்றச் சென்ற இரு பொலிஸார் மீதும், இளைஞனுடன் அவரது தாயார், சகோதரிகள் இணைந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த 4 பொலிஸார் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடாத்திய இளைஞன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தில் இளைஞன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரைக் கைது செய்து மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் சனிக்கிழமை (06) ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார். இதேவேளை, கைது செய்யப்பட இளைஞன் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் வீதியில் செல்வோர் மீது தாக்குதல் நடாத்திய சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “கொந்தராத்துக்காக கொண்டுவரப்படின் ஆதரிக்கமாட்டோம்”

பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் குருநாகல் மாவட்ட மத்தியக் குழுக் கூட்டம் ரோமன் பரடைஸ் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“எதிர்காலத்தில், நாட்டுக்குத் தேவையான நல்லதொரு தலைமைத்துவத்தையும் சிறந்த ஆட்சி, அதிகாரத்தையும் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, குருநாகல் மாவட்ட கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நாம் கலந்துரையாடி, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டோம்.

தற்போது நாட்டில் வாழ முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. பொருட்களுடைய விலை கட்டுக்கடங்காமல் அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மிகவும் பாரதூரமான கஷ்டங்களுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வற் வரியினால் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையைக் கொண்டுசெல்ல முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரிசி, சீனி போன்ற அத்தியாவசிய பொருட்களைக்கூட வாங்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றார்கள். எனவே, இவற்றுக்கான நிவாரணத்தை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும்.

அத்துடன், திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த காலங்களில் பயங்கரவாத தடைச்சட்டம் சுயநலத்திற்காகவும் தங்களுடைய கட்சி அரசியலை மேற்கொள்வதற்காகவுமே பயன்படுத்தப்பட்டமையை நாம் அறிவோம். எனவே, நாட்டுக்கு நன்மைபயக்கக் கூடியதாக, அரசியல் இலாபத்துக்காக எந்தவோர் இனத்தையும் மதத்தையும் குறிவைக்காமல் செயல்படக்கூடிய ஒரு சட்டமாக அது அமைந்தால் ஆதரவு வழங்குவோம். அவ்வாறின்றி, சுயநலத்திற்காகவோ அல்லது வேறு நாடுகளின் கொந்தராத்துக்களை எமது நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான திருத்தப்பட்ட சட்டமாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாது” என்று தெரிவித்தார்.

# 3 எம்.பிக்கள் உட்பட ஏழுபேர் விடுவிப்பு

முன்றலில் இருந்து கிழக்கு நோக்கி இடம்பெற்ற பேரணியில் பங்கேற்றவர்களில் எழுவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான, சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட எழு பேரே வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

தேர்தல் காலத்தில் போராட்டம் நடத்தியமை, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் 7 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன், கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் பங்கேற்பதற்காக வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சிலருக்கு எதிரான வழக்கு விசாரணையும் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது.

குறித்த இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்குத் திங்கட்கிழமை (08) எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்குகள் தொடர்பாகச் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டுமென பொலிஸார் தெரிவித்த போது பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி, இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்டு அனைவரையும் விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து இரண்டு வழக்குகளையும் கிடப்பில் போட்ட நீதிமன்றம், பிரதிவாதிகள் அனைவரையும் விடுவித்து உத்தரவிட்டது.

இந்த வழக்குகளில் பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவுடன் சட்டத்தரணி பிருந்தா சந்திரகேஷ் ஆஜராகியிருந்தார்.

# 300 கி.கி. லீக்ஸ் திருடிய இருவருக்கும் விளக்கமறியல்

விவசாய தோட்டத்தின் உரிமையாள செய்த முறைப்பாட்டை அடுத்து களவாடிய லீக்ஸை, நோர்வூட் நகரில் விற்பனை செய்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் இருவரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்தனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரும், ஹட்டன் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் விநாயகமூர்த்தி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 10 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# “லசந்தவுக்கு நீதி கிட்ட வேண்டும்”

இந்நிலையில், கொழும்பில் உள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில், திங்கட்கிழமை (08) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல லால் பண்டாரிகொட ஆகியோர் பங்கேற்றனர். ஊடகவியலாளர் சந்திப்பு ஆரம்பிக்கும் முன்னர், அவ்விருவரும் எழுந்து நின்று, லசந்த விக்கிரமதுங்கவுக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில், ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம்,

> **லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளைக் கண்டறிவோம் எனக் கடந்த சில வருடங்களாக அனைத்துத் தேர்தல்களின் போதும் பல்வேறு அரசியல்வாதிகள் வாக்குறுதியளித்திருந்தனர்**

இன்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் மிலேச்சத்தனமாக,அரச பயங்கரவாதத்தின் மூலம் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கங்கவிற்கு நீதி வழங்குவோம், லசந்த விக்ரமதுங்கவின் கொலையாளிகளைக் கண்டறிவோம் எனக் கடந்த சில வருடங்களாக அனைத்துத் தேர்தல்களின் போதும் பல்வேறு அரசியல்வாதிகள் வாக்குறுதியளித்திருந்தனர்.

எனினும், எந்தவோர் அரசியல் தலைவர்களும் லசந்த விக்ரமதுங்கவிற்கும் அன்னாரது குடும்பத்திற்கும் ஜனநாயகத்தின் பெயராலும், தமது கடமையை நிறைவேற்றவில்லை என்றும் இது வெட்கக்கேடான செயல் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் தனது வாழ்நாளில், மக்களுக்கு உண்மையையும், சமூக அநீதிகளையும், உள்ளதை உள்ளவாறு வெளிக்கொணரவும் பகிரங்கப்படுத்தவும் துணிச்சலாகவும் சாதுர்யமாகவும் அஞ்சாதும் செயற்பட்டவராவார். இதன் விளைவாக அவர் தனது உயிரை தியாகம் செய்யவும் நேரிட்டது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# நீதியமைச்சரை சந்தித்தார் ஜூலி

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தேவையான திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி வெளிவிவகார அமைச்சின் ஊடாக அரச அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீதி அமைச்சர் இங்கு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார விவகாரத்துக்கு எதிராக சஜித் வழக்கு

இலட்சக்கணக்கான மின் நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, இலங்கை மின்சார சபை, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, அமைச்சின் செயலாளர் எம்.பி.டி. யு.கே.மாபா பத்திரன மற்றும் சட்டமா அதிபரை பிரதிவாதியாகக் குறிப்பிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

மதிப்பிடப்பட்ட நீர்மின் உற்பத்தி 3750 முதல் 4510 ஜிகாவோட் வரை தாண்டியுள்ளமை, மின்சாரத் தேவை மணிக்கு 400 ஜிகாவோட் குறைந்துள்ளமையினால் 26 பில்லியன் ரூபாவும்,மின்சார அலகு ஒன்றின் விலையை 18 சதவீதத்தால் அதிகரித்ததன் காரணமாகவும், மின்சார சபை தலா 26 பில்லியனாக ரூபாய் வீதம் 52 பில்லியன் ரூபாய் இலாபத்தை இத்தருணத்தில் ஈட்டியுள்ளது.

> **நாட்டிலுள்ள மொத்த மின் நுகர்வோர் குறித்துச் சரியான தரவுகள் மின்சார சபையிடமோ அல்லது மின்சக்தி அமைச்சரிடமோ இல்லை. இந்த 2 நிறுவனங்களும் வைத்திருக்கும் தரவுகளில் முரண்பாடுகள் உள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் இருந்தும், துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பல்வேறு சட்டங்களை முன்வைத்துள்ளமை வியப்பளிக்கிறது. ஹிட்லரைப் போன்று மாறாமல் மகாத்மா காந்தி போன்று செயற்படுமாறு துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கூற வேண்டியுள்ளது**

இந்த இலாபம் நாட்டின் மின் நுகர்வோருக்கு நிவாரணமாக வழங்கப்படாது, மின் நுகர்வோர், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் உள்ளிட்ட ஒட்டுமொத்த மக்களையும் மேலும் ஒடுக்குவதற்கு எதிராக இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் வினை திறனான மின் உற்பத்தி கொள்கை இல்லாததால்,மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலும்,வினை திறனான சேவை வழங்குவதிலும் பல சிக்கல்கள் நிலவுகின்றன.புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் ஒரு அலகு மின்சாரத்தின் விலை குறைந்த மட்டத்தில் கொடுக்கக்கூடிய தருணத்தில்,இதை மையமாகக் கொண்ட எந்த வேலைத்திட்டமும் நாட்டில் இல்லாததால், இது பெரும் பிரச்சினையாக உள்ளது. அனைத்து மின்சார நுகர்வோரின் உரிமைகளுக்காகவும் வேண்டியே இந்த அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்குத் தெரிவித்தார்.

இதன் மூலம் மின்சார விலையைக் குறைக்க வேண்டும்.இதற்கான பணிகளை பொதுப் பயன்பாட்டு ஆணைக்கு மேற்கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் இலாபத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். அதுமட்டுமின்றி, வறிய மக்களுக்கான மின் நுகர்வோருக்காக வேண்டி புதிய மின்சார விலைச்சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

நாட்டிலுள்ள மொத்த மின் நுகர்வோர் குறித்துச் சரியான தரவுகள் மின்சார சபையிடமோ அல்லது மின்சக்தி அமைச்சரிடமோ இல்லை. இந்த 2 நிறுவனங்களும் வைத்திருக்கும் தரவுகளில் முரண்பாடுகள் உள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் இருந்தும், துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பல்வேறு சட்டங்களை முன்வைத்துள்ளமை வியப்பளிக்கிறது. ஹிட்லரைப் போன்று மாறாமல் மகாத்மா காந்தி போன்று செயற்படுமாறு துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கூற வேண்டியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

# கிணற்றில் இருந்து மண்ணெண்ணெய்

**செ.கீதாஞ்சன்**

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட உடையார் கட்டு குரவில் கிராமத்தில் கிணற்றுக்குள் இருந்து கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் வெளியேறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், குரவில் கிராமத்தில் வசிக்கும் குடும்பத்தினர் கிணற்றினை சுத்தம் செய்வதற்காக திங்கட்கிழமை (08) நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு இறைத்துள்ளார்கள்.

இதன்போது, கிணற்று நீருடன் மண்ணெண்ணெய் கலந்திருப்பதைக் கண்டதையடுத்து, இந்த சம்பவம் கிராமத்தில் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் காணி உரிமையாளர்களைக் கேட்டபோது, 2012ஆம் ஆண்டு மீள் குடியேறிய பின்னர் 23 அடி ஆழம் கொண்ட கிணறு தோண்டி கட்டியுள்ளார்கள்.

தற்போது கிணற்றினை சுத்தம் செய்யும்போது முதல் கருநிறத்தில் காணப்பட்ட கிணற்று நீர், பின்னர் மண்ணெண்ணெய் மணக்கத் தொடங்கியுள்ளது. கிணற்று நீரின் மேற்படலம் மண்ணெண்ணெய்யாகத் தொடர்ச்சியாகக் காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வாளியால் தண்ணீரை அள்ளி அதில் ஒரு இலையினை நனைத்து அதனைப் பற்றவைத்தபோது, அந்த இலை எரிந்துள்ளது. அதனை விட மண்ணெண்ணெய் மணம் வீசுகின்றது.

மேலும், வீட்டின் உரிமையாளர்கள் கிராம சேவையாளருக்குத் தொடர்பினை ஏற்படுத்தித் தெரியப்படுத்தியுள்ளதுடன், கிராம சேவையாளர் ஊடாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர்கள் சம்பவ இடத்திற்கு வருகை தந்துள்ளனர்.



பின்னர் கிணற்றினை பார்வையிட்டுள்ளதுடன், கிணற்றின் எண்ணெய் கலந்த நீரின் மாதிரி எடுத்து சென்று, இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இது குறித்து மேலும் அயலவர்களை விசாரித்தபோது, காணிக்கு அருகில் விடுதலைப் புலிகள் காலத்தில் விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்று காணப்பட்டுள்ளதாகவும் அந்த காலத்தில் நிலத்தில் புதைக்கப்பட்ட மண்ணெண்ணெய் லீக்காகி தற்போது நிலத்தடி நீரில் கசிந்துள்ளதோ என்ற சந்தேகமும் எழுந்துள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

தற்போது நிலத்தடி நீர்மட்டம் உயரமாகக் காணப்படுவதால் தொடர்ச்சியாக இறைத்து நீர்வரத்து பகுதியினை கண்டறியமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.



இதேவேளை, தங்கள் குடிநீர் மற்றும் வீட்டுதேவைக்காக பயன்படுத்தி வந்த கிணற்றில் மண்ணெண்ணெய் கலந்ததால் குடிநீரினை பெற்றுக்கொள்வதற்கும் குளிப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்த குடும்பம் தெரிவித்துள்ளார்கள். அத்துடன், வீதிக்கு சென்று வீதியில் உள்ள பொதுக்கிணற்றில் இருந்தே குடிநீரினை பெற்றுக்கொள்கின்றோம் என்றும் தெரிவித்துள்ளார்கள்.

## நடிகையை துன்புறுத்திய சாரதி தப்பியோட்டம்

23 வயதுடைய பிரபல நடிகை ஒருவரை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்த முயன்ற முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் தப்பியோடியுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பிலியந்தலை - ஜாலியகொட பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நடிகையின் தனிப்பட்ட தேவைக்காக, மொரட்டுவை கட்டுபெத்த பிரதேசத்தில் இருந்து நுகேகொடை வரை வாடகை சேவைகளை வழங்கும் நிறுவனம் ஒன்றின் முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளார்.

மொரட்டுவ கட்டுபெத்த பிரதேசத்தில் இருந்து நுகேகொடை நோக்கி முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது, திடீரென முச்சக்கர வண்டியை பிலியந்தலை ஜாலியகொட பகுதியில் வீதிக்கு அருகில் நிறுத்தி, தொழில்நுட்ப கோளாறை சரிபார்ப்பதாக கூறிய சாரதி, முச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி, பின் இருகையில் இருந்த நடிகையிடம் சென்று அவளை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்த கட்டாயப்படுத்தியுள்ளார்.

சந்தேக நபரை முச்சக்கர வண்டியில் இருந்து வெளியே தள்ளிவிட்ட நடிகை, முச்சக்கர வண்டியில் இருந்து குதித்து அலறியடித்ததாகவும், முச்சக்கர வண்டியின் சாரதி நடிகையை வீதியில் விட்டுவிட்டு ஓடிவிட்டதாகவும் அங்கிருந்த மக்களிடம் நடிகை கூறியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் முச்சக்கர வண்டி கொழும்பு- ஹொரணை வீதியூடாக பொரலஸ்கமுவ நோக்கி தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## "இந்திய தமிழ் வம்சாவளியினர் மலையகத்தில் முதலிட வேண்டும்"

**டி.ஷங்கீதன்**

இந்தியத் தமிழ் வம்சாவளியினர் மலையகத்தில் முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டும். சென்னை உலக தமிழ் வம்சாவளி மாநாட்டில், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச மட்டத்திலும் இந்தியாவிலும் இருக்கின்ற தமிழ் வர்த்தகர்கள் இலங்கையின் மலையகப் பகுதிகளில் தங்களுடைய முதலீடுகளைச் செய்ய முன்வர வேண்டும் இதன் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உங்களுடைய பங்களிப்பைச் செய்ய முடியும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் என்றார்.

இந்தியாவின் சென்னையில் உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்ற சர்வதேச வர்த்தக மாநாட்டின் நிறைவு நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். இம்மாநாட்டிற்கு உலக தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவர் ஜே.செல்வகுமார் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றி வேலுசாமி இராதாகிருஸ்ணன்

இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலைமைக்குச் சென்ற பொழுது அதனை மீளக் கட்டியெழுப்புவதற்கு அதிக பங்களிப்பைச் செய்த நாடு இந்தியா என்பதை யாரும் மறுக்க முடியாது. எனவே, எங்களுடைய இந்திய வம்சாவளி தமிழர்கள் அனைத்து நாடுகளிலும் பறந்து வாழ்கின்றார்கள். அவர்களில் அநேகமானவர்கள் இன்று பொருளாதார ரீதியாக உயர்ந்த இடத்தில் இருக்கின்றார்கள் எனவே, அவர்கள் அனைவரும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன் வர வேண்டுமென அழைத்தார்.

எங்களுடைய மலையக இளைஞர் யுவதிகளுக்கு அனைத்து திறமைகளும் இருக்கின்றது.ஆனால் அவர்களுக்குச் சந்தர்ப்பம் என்பது மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பொருளாதார ரீதியாக நாங்கள் பின்னடைந்தவர்களாகவே இருக்கின்றோம். எங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு இங்குள்ள அதாவது இந்த மாநாட்டில் பங்குபற்றியுள்ள முதலீட்டாளர்கள் முன்வருவார்களானால் அது இந்த மாநாட்டிற்குக் கிடைத்த ஒரு வெற்றியாக நான் கருதுகின்றேன் என்றார்.



## 'ஐஸ்'க்கு அடிமையான யாழ். பெண் கைது

**எம்.றொசாந்த்**

ஐஸ் போதைக்கு அடிமையான இளம் பெண்ணொருவர் பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் இரவுவேளை சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்தி



மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் போதைக்கு அடிமையானவர் என தெரியவந்துள்ளது.

இதனை தொடர்ந்து அப்பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில்போது, குறித்த பெண் தாய், தந்தை இல்லாத நிலையில், பேத்தியாருடன் தங்கியே வாழ்ந்து வருகின்றதாகவும் அண்மைக்காலமாக ஐஸ் போதைக்கு அடிமையாகி உள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியவேளை, அப்பெண்ணை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## இளைஞர்கள் இருவரும் மையத்துக்கு அனுப்பிவைப்பு

**எம்.றொசாந்த்**

யாழ்ப்பாணம் - மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் போதைப்பொருளுடன் கைதான இரு இளைஞர்களையும் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 24 மற்றும் 25 வயது இளைஞர்களை சட்ட வைத்திய அதிகாரி முன் முற்படுத்தி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது இருவரும் போதைக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் இரு இளைஞர்களையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது, அவர்களை கந்தக்காடு மறுவாழ்வு மையத்திற்கு அனுப்புமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

## கொழுந்து லொறிக்கு சிறுவன் பலி

தேயிலை கொழுந்து ஏற்றிச் சென்ற லொறி ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் உள்ள வீடொன்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில், சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக தினியாவல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெலவத்தையில் இருந்து தினியாவல நோக்கி பயணித்த லொறி, யட்டபாத 09 அஞ்சல் பகுதியில் வைத்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் யட்டபான பகுதியில் வசிக்கும் ஆறு வயதான ஆதித்ய புன்சரா என்ற சிறுவன் உயிரிழந்துள்ளான்.

மேலும், சம்பவத்தில் லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த லொறியின் சாரதி மற்றும் உதவியாளர் மேகதன்ன வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் தினியாவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## மாணவியை கடத்தி கூட்டு வன்புணர்வு



**கனகராசா சரவணன்**

மட்டு. காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தை சேர்ந்த 15 வயதுடைய பாடசாலை மாணவியை கடத்திச் சென்று தாக்கி, கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த மாணவியை ஆரியம்பதி பகுதிக்கு கடந்த 5ஆம் திகதி அழைத்துச் சென்று அங்கு வைத்து தாக்கி, வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொண்ட பொலிஸார், சந்தேகத்தின் பேரில் மூவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஆரியம்பதி பகுதியைச் சேர்ந்த 26-32 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கஞ்சா இழுத்தவர் இடைநீக்கம்

கடமையின்போது கஞ்சா போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஹபராதுவ பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அவர், தலைமைப் பரிசோதகரால் கைது செய்யப்பட்டு, கராப்பிட்டிய மருத்துவமனையின் நீதிசட்ட வைத்திய மருத்துவ அதிகாரி முன் ஆஜர்படுத்தப்பட்டதுடன், சந்தேகத்திற்குரிய கான்ஸ்டபிள் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று வைத்திய அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

குறித்த அறிக்கையின் அடிப்படையில் காலி பொலிஸ் அத்தியட்சகர் சனத் அமரசிங்கவினால் குறித்த கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

## 'மாவா' பெண் கைது

**எம்.றொசாந்த்**

யாழில் கஞ்சா கலந்த மாவா பாக்கினை விற்பனை செய்த குற்றஞ்சாட்டில் இளம் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலை கிழக்கை சேர்ந்த குறித்த பெண்ணை கைது செய்த பொலிஸார், அப்பெண்ணின் உடைமையில் இருந்து கஞ்சா கலந்த ஒரு தொகை மாவா பாக்கினையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

சிறு விளம்பரம்

எதுல்கோட்டே பிரதான வீதிக்கு அருகில் வீடு மற்றும் வியாபார பாவனைக்கு ஏற்ற கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு. 3,500,000 - 5,000,000 தொடர்புக்கு. 075-9123031

# 22 மில்லியன் மக்களும் ஐந்து முன்னாள் ஜனாதிபதிகளும்

இந்நாட்டு மக்களுக்கு உணவு வழங்குவதில் உள்ள சிரமம் 2024இல் எப்படியும் இரு மடங்காகவோ அல்லது மூன்று மடங்காகவோ கூடுமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. வீட்டில் இருக்கும் அத்தனை பொருட்களை விடவும், சமையலுக்கான பொருட்களைப் பாதுகாக்கவேண்டிய கட்டாயம் ஏற்படக்கூடுமெனப் பலரும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

மக்களின் பசியைப் போக்குவது மிகவும் முக்கியமானது. அந்த உண்மைகளைக் கருத்தில் கொண்டு, நாட்டின் உணவு உற்பத்திக்கு தங்களால் இயன்ற பங்களிப்பை வழங்குவது விவசாயிகள் மற்றும் சாமானியர்களின் கடமையாக இருக்கும்.

நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்காக 2024இல் 250 மில்லியன் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை ஒருபோதும் போதாது. ஐந்து முன்னாள் ஜனாதிபதிகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகையை எண்ணிப் பார்க்கும்போது, அந்த உண்மை உறுதியாகிறது. இவ்வருடம் ஐந்து முன்னாள் ஜனாதிபதிகளின் பராமரிப்புக்காக 110 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், 22 மில்லியன் மக்களின் உணவுப் பாதுகாப்பிற்காக 250 மில்லியன் ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

நான்கு பேர் கொண்ட குடும்பத்தை ஒரு மாதம் பராமரிக்க ரூ. 120,000 செலவிடப்படும் என புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது. புள்ளிவிவரங்களின்படி, ஒரு நபரின் காலை உணவுக்கான சராசரி செலவு 300 ரூபாய். மதிய உணவும் இரவு உணவும் தலா 350 ரூபாய். அப்போது ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு உணவு செலவு 1,000 ரூபாய். ஒரு நபருக்கு மாதம் உணவு செலவு 30 ஆயிரம் ரூபாயாகும்.

இவ்வளவு பணத்தைச் செலவழிக்கும் ஒருவர் எப்படி மின்சாரக் கட்டணம், தண்ணீர்க் கட்டணம், குழந்தைகளின் பாடசாலைச் செலவு, போக்குவரத்துச் செலவுகளை ஈடுகட்ட முடியும்? அந்தத் தரவுகளின்படி, இலங்கை சனத்தொகையில் 20 சதவீதமானவர்கள் இன்னமும் மாத வருமானமாக 17,500 ரூபாய் பெறுகின்றனர்.

இதன்படி, நாட்டின் சனத்தொகையில் 25 வீசததமானவர்களுக்கு, அதாவது 5.7 மில்லியன் மக்களுக்கு இந்த ஆண்டு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும். நாட்டின் மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியினருக்கு உதவி தேவைப்படும் பட்சத்தில் நாட்டின் எதிர்காலம் எப்படி பாதிக்கப்படும்?

இந்தப் பின்னணியில் நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு 75 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நாட்டின் பாடசாலை மாணவர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு போதிய உணவு கிடைப்பதில்லை. நாட்டின் 1.4 மில்லியன் குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ள முதல் பத்து நாடுகளில் நாம் இப்போது இருப்பது மிகவும் வருத்தமான நிலை.

நீர்த்தேக்கங்களில் விழுந்த நீர் மின்சாரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுமா அல்லது விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுமா என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். விவசாய நிலங்களுக்கு போதிய நீர் வரத்து இல்லாததால், அடுத்த புதிய பருவத்தில் நெல் விளைச்சல் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக, ஆண்டு நெல் அறுவடையில் முப்பத்தைந்து சதவீதம் புதிய பருவத்தில் கிடைக்கும். அதிக உற்பத்திச் செலவுகள் காரணமாகக் கடந்த 2023/24 பருவத்தில் பயிரிடப்பட்ட நிலத்தில் பத்து சதவீதம் ம் பயிரிடுவதை விவசாயிகள் தவிர்த்தனர். இதனால் அரிசி விலை ஏற்கெனவே உயர்ந்துள்ளது. அடுத்த புதிய பருவத்தில் நெல் அறுவடை குறைக்கப்பட்டால், அரிசியின் விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கலாம்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு

எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் எம்.பி.க்கள் செய்தது என்ன?

மொஹமட் பாதுஷா

தேர்தல்கள் பற்றித்தான் அரசியல்வாதிகள் இப்போது அதிகமாகப் பேசுகின்றனர். வாழ்க்கைச் சுமையால் மக்கள் படாதபாடுபட்டுக் கொண்டிருப்பதையெல்லாம் ஒருபுறம் வைத்து விட்டு அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் தேர்தலுக்கான வியூகங்கள் குறித்தே முழுநேரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.

அடுத்த தேர்தல் பற்றிப் பேசுவதற்கும் பரப்புரை செய்வதற்கும் முன்னர், முன்னைய பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதித் தேர்தலில் அல்லது ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அன்றேல், அவற்றுக்கு என்னவாயிற்று என்பதைக் காரண காரியங்களோடு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

ஏதோ அடுத்த மாதம் தேர்தல் நடைபெறப் போகிறது என்ற தோரணையில்தான் கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளும் அரசியல்வாதிகளும் செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

இந்தப் பின்னணியிலேயே, பெருந்தேசியக் கட்சிகள் தமது கூட்டணிகள் குறித்து அறிவித்தல்களை வெளியிடுகின்றன. இதற்கு ஒரு படி மேலே போய் தங்களுடைய ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற பெயர்களையும் பகிரங்கப்படுத்தி வருகின்றன.

வழக்கமாகக் கூட்டமைப்பு அல்லது கூட்டணி கோட்பாட்டை முன்வைக்கும் தமிழ்க் கட்சிகள் இம்முறை பொது வேட்பாளர் கருத்தியலை முன்வைத்துள்ளன. இது பலவிதமான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

சமகாலத்தில், முஸ்லிம் கட்சிகள், தலைவர்கள் மற்றும் எம்.பிக்கள் பகிரங்கமாக எந்த அறிவித்தலையும் வெளியிடவில்லை என்றாலும், தேர்தலுக்கான தமது வியூகம் குறித்த சாத்தியவள ஆய்வை மேற்கொண்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

சரி, அதுவெல்லாம் இருக்கட்டும். இந்த அரசியல் தரப்புக்களின் முன்னேற்ற அறிக்கை எங்கே?. அரசியல்வாதிகள் கடந்த தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகள், உத்தரவாதங்கள், விஞ்ஞாபன முன்மொழிவுகளில் எதனை நிறைவேற்றியுள்ளார்கள்? என்ற மீளாய்வு அறிக்கை எங்கே? என்ற கேள்விகளுக்கு முதலில் பதிலளிக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாகக் கடந்த 4 வருடங்களாக எம்.பிக்களாக இருக்கின்ற முஸ்லிம் எம்.பிக்கள் தாம் வழங்கிய வாக்குறுதிகளில் எதனை நிறைவேற்றியுள்ளோம் என்பதை மக்களுக்குப் பகிரங்கமாக அறிக்கையிட வேண்டும். அடுத்த தேர்தலுக்குச் செல்ல முன்னர் அதைச் செய்தாக வேண்டும்.

ஒருவர் ஒரு தொழிலுக்கு நியமிக்கப்பட்டு விட்டால் அவரிடமிருந்து மாதாந்தம் முன்னேற்ற அறிக்கை கோரப்படும். தமக்கு வழங்கப்பட்ட பணியை எந்தளவுக்கு நிறைவேற்றியுள்ளார் என்பதை அவர் அதில் விபரிக்க வேண்டும். அதனடிப்படையிலேயே ஒப்பந்தக்கால நீடிப்பு அல்லது பதவி உயர்வுக்கான பரிந்துரைகளை மேலதிகாரிகள் முன்வைப்பார்கள். இதுதான் பொதுவான வழக்கம்.

> **“ 2020 தேர்தலில் வெற்றிபெற்ற முஸ்லிம் எம்.பிக்கள், அடுத்த தேர்தலில் போட்டியிட்டாலும் போட்டியிடாவிட்டாலும் இப் பதவிக் காலத்தில் தங்களால் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்**

அந்த அடிப்படையில் பார்த்தால், முஸ்லிம் கட்சிகள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்கள் உள்ளடங்கலாக முஸ்லிம்களின் வாக்குகளால் தெரிவான அனைத்து முஸ்லிம் எம்.பிக்களும் தமது பதவிக்காலத்தில் செய்த, சாதித்த விடயங்களை மக்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். இது அவர்களது கடமை என்பதை மறக்கக் கூடாது.

20 வருடங்களாக முஸ்லிம் கட்சியின் தலைவர்களாகப் பதவி வகிக்கின்ற அரசியல்வாதிகள் உள்ளனர். மூன்று அல்லது நான்கு பாராளுமன்றக் காலத்தில் எம்.பிக்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் உள்ளனர்.

மாகாண சபைகளில் அதிகாரத்தில் இருந்த பலரும் உள்ளனர்.

எனவே கடந்த இரண்டு, மூன்று பாராளுமன்ற காலத்தில் எம்.பிக்களாக இருந்தவர்கள் இந்த சமூகத்திற்காக இதுவரை என்ன செய்துள்ளார்கள்? அதேபோல், 2020 தேர்தலில் வெற்றிபெற்ற முஸ்லிம் எம்.பிக்கள், அடுத்த தேர்தலில் போட்டியிட்டாலும் போட்டியிடாவிட்டாலும் இப்பதவிக் காலத்தில் தங்களால் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் கோட்டபாய ராஜபக்ஷவே இந்த நாட்டுக்குப் பொருத்தமான தலைவர் என பிரசாரம் செய்தவர்கள் இன்று வேறு விதமாகப் பேசுகின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்னதாக மொட்டுக் கட்சி, கடந்தகாலத்தில் சாதித்தது என்ன என்பதை வெளிப்படுத்தியாக வேண்டும்.

இதே விடயத்தை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியும் செய்தாக வேண்டும். தமிழ் மக்களின் அபிலாசைகள் மீது அரசியல் செய்யும் தமிழ் அரசியல்வாதிகளும், முஸ்லிம் சமூகத்தின் உணர்வுகள் மீது நின்று அரசியல் செய்யும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது.

முஸ்லிம் அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றிரண்டு கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மேடைகளில் அவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் என்னவென்று அவர்கள் தமக்கு வசதியாக மறந்து விட்டார்கள். மக்களும் மறந்து போய்விடுவார்கள் என நினைக்கின்றார்கள்.

இந்த சந்தர்ப்பத்திலாவது முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் முஸ்லிம் கட்சித் தலைவர்கள், பிராந்திய தளபதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்துவதாகத் தெரியவே இல்லை. மாறாக, அடுத்த தேர்தலில் தாம் எப்படி வெற்றி பெறலாம் என்றே கனவு கண்டு கொண்டிருக்கின்றனர்.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது!

முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள், அபிலாஷைகளை முன்னிறுத்தியே அரசியல் செய்கின்றன அல்லது அப்படிக் காட்டிக் கொள்கின்றன. முஸ்லிம் சமூகத்திற்காக உயிரையும் கொடுப்போம் என்று எம்.பி வேட்பாளர்கள் பேசுகின்றனர்.

தேர்தல் பிரசார மேடைகளில் அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அளவே இல்லை. முஸ்லிம் சமூகத்தின் காணிப் பிரச்சினைகள், முஸ்லிம்களுக்கு எதிரான இன, மத பாகுபாடு, ஒடுக்குமுறை, நிலப் பங்கீடு, நியாயமான ஒதுக்கீடு, இனவாதம் என எல்லாவற்றையும் செய்வோம் என்று கூறியவர்களும், அதனைப் பின்னர் மறந்து விட்டவர்களும் இவர்கள்தான்.

தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் அல்லது தமது பதவி, பணம், அரசியல் இருப்புக்களை விட சமூகத்தின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் மக்கள் பிரதிநிதி ஒருவரையாவது முஸ்லிம் சமூகத்திற்குள் தேடிப்பிடிப்பது கடினமாகி விட்டது.

பாராளுமன்ற தேர்தல் நடந்து 3 வருடங்களாயிற்று. ஆனால், நாட்டின் விடயத்தில் ராஜபக்ஷக்கள எப்படி பொறுப்பில் இருந்து விலகினார்களோ அநேகமான முஸ்லிம் எம்.பிக்களும் சமூகத்தின் விடயத்தில் இந்தக் காலப்பகுதியில் அவ்வாறுதான் நடந்து கொண்டார்கள் என்றால் மிகையில்லை.

தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, தமது பதவிக்காலம் முடிவதற்கு இடையில் எதனையாவது சாதித்துக் கொள்வதற்கு, அடுத்த தேர்தலுக்கு முன்னர் முஸ்லிம் சமூகத்தின் முக்கிய பிரச்சினைகள் ஏதாவது ஒன்றைத் தீர்த்து விடுவதற்கு எந்த முஸ்லிம் தலைவரும் எம்.பியும் முயற்சிப்பதாக கண்டவர்கள் உண்டோ?

சரியாகச் சொன்னால், ஒரிரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர மற்ற எல்லாரையுமே அரசியல் களத்தில் காணவில்லை. பாராளுமன்றத்தில் அவர்கள் தூங்குகின்றார்கள் என்றே மக்கள் கருதுகின்றனர். பாராளுமன்றத்திற்கு வெளியிலும் சும்மா இருப்பதிலேயே மீதமுள்ள காலத்தையும் கடத்த முனைவதாகத் தெரிகின்றது.

ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் குறிப்பிட்ட காலத்தின் முடிவில் ஒரு முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து, தாம் செய்த காரியங்களை வெளிப்படுத்துவது போல முஸ்லிம் எம்.பிக்கள், தலைவர்கள் தமது பதவிக்காலத்தில் சாதித்தது என்ன என்பதை மக்களுக்குக் கூறிவிட்டுத்தான் இந்த பதவிக்காலத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்.

தங்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தமக்கு வழங்கிய வாக்குறுதிகளில் எதனை நிறைவேற்றியுள்ளார்? அதிகாரத்தில் இருந்த காலத்தில் சமூகத்தின் என்னென்ன பிரச்சினைகளைத் தீர்த்து வைத்துள்ளார்கள் என்பதை முஸ்லிம் சமூகம் பகிரங்கமாக அறிந்தே அடுத்த தேர்தலில் வாக்களிப்பது பற்றிய முடிவை எடுக்க வேண்டும்.

‘உங்களுக்குத் தெரியாது, நாங்கள் எல்லாவற்றையும் இரகசியமாகச் செய்து கொண்டுதான் இருக்கின்றோம்’ என்ற கதைகளை எல்லா விவகாரங்களுக்கும் கூற முடியாது. ஏனெனில் எப்படிச் செய்தாலும் அதன் இறுதிப் பெறுபேறுகள் பகிரங்கமாகவே வெளிப்படும்.

எனவே, அடுத்த தேர்தலுக்கு போட்டியிடும் எண்ணமுள்ளவர்கள் மட்டுமின்றி, இந்த பாராளுமன்றத்தோடு வீட்டுக்குப் போகும் சாத்தியமுள்ள முஸ்லிம் எம்.பிகளும் இதுவரையான தமது பதவிக்காலத்தில் சாதித்த விடயங்களின் பட்டியலை தமக்கு வாக்களித்த மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

முஸ்லிம் அரசியல்வாதிகள் அடுத்த தேர்தல் பற்றிப் பேசுவதற்கும், மீண்டும் வாக்குக் கேட்டு வருவதற்கும் முன்னர், இதுவரை தாங்கள் செய்தது என்ன? என்ற கேள்விக்கு மட்டும் மக்களுக்குப் பதிலளித்தால் போதுமானது.

## கடிதங்கள்

### நித்தகைக் குள காணிகளை விடுவியுங்கள்

முல்லைத்தீவு - கரைதுறைபற்று நித்தகைக் குளக் காணிகளை விடுவித்து விவசாய நடவடிக்கைகளுக்கு உட்படுத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நித்தகைக் குளப் பகுதியில் 600 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு காணப்படுகின்றது. 1980களில் இப்பகுதியில் விவசாய நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

போர் சூழல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தனர்.

2010ற்கு பின்னர் குமுழமுனை, தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான்குளம் பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்தனர். கரைதுறைபற்று பிரதேச செயலகத்திலும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திலும் கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற கூட்டங்களில் நித்தகைக் குள காணி விடுவிப்பு தொடர்பாக இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை. காரணம் பெருமளவு காணி வனவளத் திணைக்களத்தின் பிடியில் உள்ளன.

குறித்த காணியினை விடுவிக்கும்படியே கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. குறிப்பாக வயல் நிலமற்ற தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் குளத்தில் வாழ்கின்ற 110 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு நித்தகை குளத்தின் கீழ் வயல் நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் உள்ளன.

கடந்த 03 மாதங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழு நித்தகைக் குளப் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தது. ஆனால் இறுதி முடிவுகள் இதுவரை எட்டப்படவில்லை.

- நடராசா கிருஸ்ணகுமார



# காத்திருக்கும் ஷிவானி



விஜய் டிவியில் ஒளிபரப்பான 'கடைக்குட்டி சிங்கம்' என்ற நாடகத்தின் மூலம் சீரியல் நடிகையாக தன்னுடைய டீனேஜ் வயதிலேயே அறிமுகமானவர் நடிகை ஷிவானி நாராயணன்.

அதன் பின்னர் விஜய் டிவியிலிருந்து வெளியேறி ஜீ தமிழ் தொலைக்காட்சியில் சிலதொலைக்காட்சி நாடகங்களிலும் மிகவும் சாந்தமாக நடித்திருந்தார்.

அது மட்டுமில்லாமல், எப்பொழும் சமூக வளைத்தளங்களில் கவர்ச்சி புகைப்படங்களை பதிவிட்டு ரசிகரகளின் ரசனைக்கு ஆளாகியும் இருப்பவர் எனவும் கூறலாம்.

இதனையடுத்து, கமல்ஹாசனின் விக்ரம் உள்ளிட்ட சில படங்களில் துணை வேடங்களில் தலைகாட்டியதோடு சரி. பம்பர் என்ற படத்தில் கதாநாயகியாக நடித்தாலும், அந்த படம் பெரிதாக வெற்றியடைடவில்லை. ஆனாலும் மனம் தளராத ஷிவானி, இன்ஸ்டாகிராமில் வரிசையாக படங்களை இறக்கி வாய்ப்புக்காக வழி மேல் விழி வைத்து காத்திருக்கிறார்.

அந்த வகையில், இப்போது மொடன் உடையில் அவர் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வைரலாகி வருகின்றன.





# Mr Bean 4ஆவது பாகம் விரைவில்





90களிலும் அதன்பிறகும் மக்கள் அதிகமாக பார்வையிடப்பட்ட தொடராகவும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் மறக்கமுடியாததாக நீடித்திருப்பது மிஸ்டர்பீன் அனிமேஷன் தொடர்.

இந்த அனிமேஷன் தொடரில் இதுவரை 3 சீஸன்கள் வெளியாகிவுள்ள நிலையில், 4ஆவது சீஸன் தற்போது தயாராகிறது.

வார்னர் பிரதர்ஸ் மற்றும் சில நிறுவனங்களுடன் இணைந்து ரோவன் அட்கின்சன் வழங்கும், மிஸ்டர் பீன் நான்கவது சீஸன் மொத்தமாக 182 எபிசோட்களுடன் தயாராகிறது.

இதில், எபிசோட் ஒவ்வொன்றும் 11 நிமிடங்களுக்கு நீளும் வகையில் திட்டமிட்டி ருக்கிறார்கள். மிஸ்டர் பீன் தனது டெடி உடன் இணைந்து, சகல வயதினரும் ரசிக்கும்படியான குறும்புத்தனமும் சாகசமும் கலந்தலூட்டிகளை அனிமேஷன் தொடரில் நடித்து இருக்கிறார்.

# 'அட்ஜஸ்ட்' சொல்றாங்க

தற்போது ஹீரோயினாக உயர்ந்துள்ள அம்மு அபிராமி நடிப்பில் உருவாகியுள்ள 'ஜிகிரி தோஸ்த்து' படம் விரைவில் திரைக்கு வர உள்ளது. மேலும் சமீபத்தில் வெளியான 'கண்ணகி' படத்தில் அம்மு அபிராமி முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இந்நிலையில், இந்த படத்தின் ப்ரமோஷன் நிகழ்ச்சியில் பங்கேற்ற அபிராமி ஷூட்டிங் ஸ்பாட்டில் சந்திக்கும் சில முக்கிய பிரச்சினைகள் குறித்து பேசியிருப்பது பிரபலங்கள் மட்டுமின்றி, இரசிகர்கள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

"பலகோடி ரூபாய் செலவு செய்து படம் எடுக்கிறார்கள். ஆனால், படப்பிடிப்பிற்காக வெளியே செல்லும்போது சரியான பாத்ரூம் வசதி கூட இல்லாமல் அவதிப்படுகிறோம். பாத்ரூம் போகவும், உடை மாற்றவும் சிரமமாக உள்ளது. கேட்டால் அட்ஜஸ்ட் செய்து கொள்ளுமாறு கூறுகிறார்கள்.

பாத்ரூம் விடயத்தை எப்படி சகித்து கொள்ளமுடியும் என்று எனக்கு தெரியவில்லை. முடிந்தவரை ரெடிமேட் டாய்லெட் போன்றவற்றையாவது கட்டாயம் செயல்படுத்த வேண்டும். கண்ட கண்ட இடத்தில் பாத்ரூம் போவதால், எனக்கு இன்பெக்சன் ஆகிவிட்டது என்றார்.


# பொங்கலன்று வெளியாகும் தமிழ் திரைப்படங்கள்

01. கேப்டன் மில்லர்:
தனுஷ் நடிப்பில் அருண் மாதேஸ்வரன் இயக்கியிருக்கும் திரைப்படமான கேப்டன் மில்லர் எதிர்வரும் 12 ஆம் திகதி திரைக்கு வருகிறது. இப்படத்தில் சிவராஜ்குமார், சந்தீப் கிஷன் நடித்துள்ளதோடு ஜீ.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

02. அயலான் :
ஆர்.ரவிக்குமார் இயக்கத்தில் உருவாகியிருக்கும் அயலான் படத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ளார். வேற்று கிரகத்திலிருந்து பூமிக்கு வரும் ஏலியனைச் சுற்றிப் பின்னப்பட்ட கதை இதுவாக இருக்குமென ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த படத்தில் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை, படத்தின் நேர்மறை அம்சங்களில் ஒன்றாக இருக்கும். கேப்டன் மில்லர் படத்தை போலவே எதிர்வரும் 12 ஆம் திகதி அயலானும் தமிழ், தெலுங்கு இரு மொழிகளில் வெளியாகவுள்ளது.

03. மிஷன்-சேப்டர்:
ஏ.எல்.விஜய் இயக்கியிருக்கும் மிஷன் - சேப்டர் பொங்கலன்று வெளியாகும் திரைப்படங்களில் வரிசையில் உள்ளது. லால் சலாம், அரண்மனை போன்ற 4 படங்களின் வெற்றிடத்தில் அருண் விஜய் நடித்திருக்கும் இப்படம் வெளியாகவுள்ளது. இந்தப்படத்தில் எமிஜாக்சன் நீண்ட இடைவெளிக்குப் பின் நடித்துள்ளார்.

04. மெரி கிறிஸ்மஸ்:
ஹிந்தியில் மொழியில் உருவாக்கப்பட்டிருக்கும் மெரி கிறிஸ்மஸ் திரைப்படம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எதிர்வரும் 12ஆம் திகதி வெளியாகவுள்ளது. இந்திப்பட படத்தில் ஸ்ரீராம் ராகவன். விஜய் சேதுபதி, கத்ரினா கைப், ராதிகா ஆப்தே, ராதிகா சரத்குமார் நடித்துள்ளனர்.




# ஸ்ருதிக்கு 'பஞ்ச சோதனை'

தமிழ் சினிமாவில் மட்டுமில்லாமல் இந்தி தெலுங்கு பல்வேறு திரையுலகினில் வலம் வருபவர் நடிகை ஸ்ருதி ஹாசன் அதும மட்டுமில்லாமல் தமிழில் விஜய், அஜித், சூர்யா என பிரபல நடிகர்களுடன் நடித்துள்ளார்.

நடிகை ஸ்ருதி ஹாசன் சிறு வயது முதலே தான் ஒரு பாப் பாடகர் ஆகவேண்டும் என்ற இலட்சியத்தை கொண்டிருப்பவர். அதன் எதிரொலியாக தனது 6 வயதிலே தேவர் மகன் படத்தில் ஒரு பாடலை பாடியுள்ளார்.

சிறிது காலம் கழித்து இவருக்கு பட வாய்ப்பு குறைய ரியாலிட்டி ஷோ தொகுப்பாளராக மாறினார். இருந்தாலும், படவாய்ப்புகள் ஏதுமின்றி வந்த ஸ்ருதி ஹாசன் இதற்கிடையில் 5 நபர்களை காதலித்து லிவிங் டூ கெதரில் வாழ்ந்து பின்னர் பிரிந்துவிட்டார்.



# பொங்கல் திருவிழா...

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக 1,008 பொங்கல் பானையுடன் , 1,500 பரத நாட்டிய கலைஞர்களுடன், 500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் திருகோணமலையில் திங்கட்கிழமை (08) இடம்பெற்றது.

பொங்கல் விழாவை முன்னிட்டு சனிக்கிழமை (06) இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஜல்லிக்கட்டு போட்டியைக் கிழக்கு ஆளுநர் நடத்தியிருந்ததுடன், இலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய வீர விளையாட்டை மீட்டெடுத்தமைக்காக உலகம் முழுவதும் இருந்து செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து "பொங்கல் திருவிழா" தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.

















கரூர்

# 3 மாணவிகளுக்கு ஆர்வ கோளாறு

கரூர் மாவட்டம் தான்தோணிமலை பகுதியில் உள்ள அரசுப் பாடசாலையில் 8ஆம் வகுப்பில் கற்று வரும் மாணவிகளில் மூன்று மாணவிகள், கடந்த 4ஆம் திகதி வீடு திரும்பவில்லை. இதுதொடர்பாக மாணவிகளின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முக்கிய பொது இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி கெமெராக்களை, பொலிஸார் ஆராய்ந்துள்ளனர்.


இதில், 3 சிறுமிகளும் காட்பாடி ரயில்வே நிலையத்தில் சுற்றித் திரிந்தது தெரியவந்துள்ளது.



இதனையடுத்து, காணாமல் போன 3 சிறுமிகளையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின்போது, கொரியாவில் பிரபல பி.டி.எஸ் (B.T.S) இசைக்குழு மீதான ஆர்வத்தால், அவர்களது இசைக்கச்சேரியை பார்ப்பதற்காக கொரியா செல்ல முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

# கவனத்தை ஈர்த்த லட்சத்தீவு





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பயணத்தால் டுபாய், மாலத்தீவை பின்னுக்கு தள்ளி இந்தியாவின் லட்சத்தீவு ஒட்டுமொத்த உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஹொலிவூட் திரைப்பட பிரபலங்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் புத்தாண்டு, பண்டிகைகள், பிறந்த நாள், திருமண நாளை உலகின் பிரபல சுற்றுலா தலங்களில் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில், ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய் நகரம் பிரபலங்களில் முதல் விருப்பத் தேர்வாக இருந்து வந்தது.

மேலும், இந்தியாவை சேர்ந்த நடிகர், நடிகைகளும் மாலத்தீவுக்கு சுற்றுலா சென்று புகைப்படங்கள், வீடியோக்களை வெளியிடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதன் காரணமாக மாலத்தீவு உலகின் பிரபல சுற்றுலா தலமாக உருவெடுத்துள்ளது.

இந்த நிலையில், பிரதமர் மோடி அண்மையில் லட்சத்தீவுக்கு அரசு முறை பயணமாக சென்றுள்ளார். அப்போது அந்த தீவின் அழகிய கடற்கரைகள், சாகச பொழுதுப்போக்கு தொடர்பான வீடியோ, புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார். இந்த வீடியோ, புகைப்படங்கள் உலகம் முழுவதும் சமூக வலைதளங்களில் வியாபித்து பரவி வருகிறது.

மேலும், கடந்த இரு நாட்களாக கூகுளில் அதிகம் தேடப்பட்ட வார்த்தையாக லட்சத்தீவு முதலிடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ராமர் கோயில் கும்பாபிஷேகம்

# நேரடி ஒளிபரப்பு

உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தியில் எதிர்வரும் 22ஆம் திகதி கும்பாபிஷேகமும், கருவறையில் குழந்தை ராமர் சிலை பிரிதிஷ்டை செய்யப்படும் விழாவும் நடைபெற உள்ளது. இவ்விழாவில் பிரதமர் மோடி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்து விருந்தினர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை உத்தரப் பிரதேச மாநில அரசு தீவிர பணியில் ஈடுபட்டு வருகிறது.

கும்பாபிஷேக விழாவிற்கான வேதசடங்குகள் எதிர்வரும் 16 அன்று தொடங்குகிறது. வாரணாசியைச் சேர்ந்த லக்ஷ்மி காந்த் தீட்சித், எதிர்வரும் 22ஆம் திகதி குழந்தை ராமர் பிரதிஷ்டை விழாவின் முக்கிய சடங்குகளைச் செய்வார். ஜனவரி 14 முதல் ஜனவரி 22-ம் திகதி வரை அயோத்தியில் அமிர்த மஹோத்சவ் கொண்டாடப்படுகிறது.

இந் நிலையில் அயோத்தி ராமர் கோயில் கும்பாபிஷேகத்தை நாடு முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்ய பா.ஜ.க திட்டமிட்டுள்ளது.



அமெரிக்கா

# டொலர்களை கடித்து துப்பிய செல்லநாய்

வீட்டில் உள்ள ஒரு குடும்ப உறுப்பினருக்கு நிகராக பலரது வீடுகளில் நாய்கள் வளர்க்கப்படுகின்றன. இப்படி வளர்க்கப்படும் நாய்கள் சில நேரங்களில் வீட்டில் இருக்கும் விலை உயர்ந்த பொருட்களை கவ்வி கொண்டு போய் விளையாடுவது என தனது சேஷ்டையை செய்து வைத்து விடும்.

அமெரிக்காவின் பென்சில்வேனியாவை சேர்ந்தவர் கிளேட்டன். இவரது மனைவி கேரி லா. இந்த தம்பதி கோல்டன்டூடுல் எனும் இனத்தை சேர்ந்த நாயை செல்லமாக வளர்த்து வருகின்றனர். இதற்கு செசில் என பெயரிட்டுள்ளனர். குடும்பத்தின் ஓர் அங்கமாகவே மாறிபோன செசில், வீட்டில் வைக்கப்பட்டு இருந்த 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கடித்து துப்பியுள்ளது.

இதனால் வீட்டின் அறை முழுவதும் டொலர்கள் கிழிந்து கிடந்தன. இதைப்பார்த்து அதிர்ச்சி



அடைந்த கேரி லா தனது கணவரை அதிர்ச்சியுடன் அழைத்தார். ஓடி வந்து பார்த்த கிளேட்டன் ஒரு நிமிடம் அப்படியே அதிர்ச்சியில் உறைந்து போனார். மொத்தம் 4 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கடித்து துப்பியிருந்தது. இதைப்பார்த்து மனவேதனையில் வெதும்பி போயுள்ளார்.

பங்களாதேஷ்

5ஆவது முறையாகவும்

# பிரதமராகிறார் ஷேக் ஹசீனா

பங்களாதேஷில் ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்று பாராளுமன்ற தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்த நிலையில், பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.

தேர்தல் முடிந்ததும் உடனடியாக வாக்குகள் எண்ணப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கை நடந்து கொண்டிருந்தபோதே, ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி 50 சதவீத இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றதாக தேர்தல் ஆணையத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் ஷேக் ஹசீனா ஐந்தாவது முறையாக வங்காளதேச நாட்டின் பிரதமராக பொறுப்பேற்க உள்ளார்.



300 இடங்களில் 264 இடங்களுக்கான முடிவு அறிவிக்கப்பட்டபோது, ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சி 204 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. அதன் கூட்டணி கட்சியான ஜதியா கட்சி 9 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது.

பங்களாதேஷில் மொத்தம் 350 தொகுதிகள் உள்ளன. இதில் 50 தொகுதிகளுக்கு அரசாங்கத்தால் பெண் எம்.பி.க்கள் நியமிக்கப்படுவர். எனவே, 300 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறும். ஆனால் ஒரு வேட்பாளர் மரணம் அடைந்ததால் மீதமுள்ள 299 தொகுதிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை (08) வாக்குப்பதிவு நடைபெற்றுள்ளது.



இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணம்

# லிவர்பூலிடம் தோற்று வெளியேறிய ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஆர்சனலின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லிவர்பூலுடனான விலகல் முறையிலான இத்தொடரின் மூன்றாவது சுற்றுப் போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே தொடரிலிருந்து ஆர்சனல் வெளியேற்றப்பட்டுள்ளது.

லிவர்பூல் சார்பாக லூயிஸ் டயஸ் ஒரு கோலைப் பெற்றதுடன், மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது.

# இந்திய குழாமில் சாம்சன்



ஆப்கானிஸ்தானிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு 20 தொடருக்கான இந்தியக் குழாமில் சஞ்சு சாம்ஸன் இடம்பெற்றுள்ளார்.

இக்குழாமில் ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ் ஆகியோருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளதுடன், ஷ்ரேயாஸ் ஐயர் மற்றும் இரவீந்திர ஜடேஜாவும் குழாமில் இடம்பெறவில்லை. இஷன் கிஷன் இத்தொடரை தவிர்த்துள்ளதுடன், காயம் காரணமாக ஹர்டிக் பாண்டியா, சூரியகுமார் யாதவ், ருத்துராஜ் கைகவாட் ஆகியோர் தெரிவு செய்யப்படவில்லை.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), யஷஸ்வி ஜைஸ்வால், திலக் வர்மா, ரிங்கு சிங், ஷிவம் டுபே, அக்ஸர் பட்டேல், அர்ஷ்டீப் சிங்க், ஆவேஷ் கான், ஷுப்மன் கில், விராட் கோலி, சஞ்சு சாம்ஸன் (விக்கெட் காப்பாளர்), ஜிதேஷ் ஷர்மா (விக்கெட் காப்பாளர்), வொஷிங்டன் சுந்தர், ரவி பிஷ்னோய், குல்தீப் யாதவ், முகேஷ் குமார்.



# தொடரை தவறவிடும் நடால்

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரை ஸ்பெய்னின் ரஃபேல் நடால் தவறவிடவுள்ளார்.

அந்தவகையில் இடுப்புக் காயத்துக்குச் சிகிச்சைக்காக 37 வயதான நடால் ஸ்பெய்னுக்குத் திரும்பவுள்ளார்.

ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாக விளையாடமல் இருந்த நடால், அண்மையிலேயே போட்டிக்குத் திரும்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலிய சீரி ஏ தொடர்

# டொரினோவிடம் தோற்ற நாப்போலி

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், டொரினோவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான நாப்போலி தோற்றிருந்தது.

டொரினோ சார்பாக, அந்தோனியோ சனப்ரியா, நிகொலா விளாசிச், அலெஸான்ட்ரோ புவொங்ஜியோர்னோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அத்லாண்டாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது. றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை போலோ டிபாலா பெற்றதோடு, அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை டெயும் கூப்மெய்னெர்ஸ் பெற்றிருந்தார்.



# ஒப்பந்தத்துக்கு சம்மதித்த மப்பே?



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பே, அக்கழகத்துடனான அவரின் ஒப்பந்த முடிவில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டில் இணைவதற்கான ஒப்பந்தத்துக்கு இணங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் கடந்த 2022ஆம் ஆண்டு கலந்துரையாடல்களை விட குறைந்தளவு தொகையையே மட்ரிட் முன்மொழிந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மட்ரிட்டை 25 வயதான மப்பே நிராகரித்துள்ளதாகவும், இங்கிலாந்து பிறீமியர் லீக்கில் கவனஞ் செலுத்துவதாகக் கூறப்படுகிறது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 09 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.